ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா2ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா3ந்தாசார்யவர்யோ மே ஸந்நித4த்தாம் ஸதா3 ஹ்ருதி3 ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருவுக்கும் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க3ராமாநுஜ மஹாதே3ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருவுக்கும் ॥

## திருவழுந்தூர் - 3

‡திருவுக்கும் திருவாகிய செல்வா!⋆
    தெய்வத்துக்கரசே! செய்ய கண்ணா!⋆
உருவச் செஞ்சுடராழி வல்லானே!⋆
    உலகுண்ட ஒருவா! திருமார்பா!⋆
ஒருவற்காற்றியுய்யும் வகையென்றால்⋆
    உடன் நின்றைவர் என்னுள் புகுந்து⋆ ஒழியா
தருவித் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (1)

பந்தார் மெல் விரல் நல் வளைத் தோளி⋆
    பாவை பூமகள் தன்னொடும் உடனே
வந்தாய்⋆ என் மனத்தே மன்னி நின்றாய்⋆
    மால் வண்ணா! மழை போல் ஒளி வண்ணா⋆
சந்தோகா! பௌழியா! தைத்திரியா!⋆
    சாம வேதியனே! நெடுமாலே⋆
அந்தோ! நின்னடியன்றி மற்றறியேன்⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (2)

நெய்யார் ஆழியும் சங்கமும் ஏந்தும்⋆
    நீண்ட தோள் உடையாய்⋆ அடியேனைச்
செய்யாத உலகத்திடைச் செய்தாய்⋆
    சிறுமைக்கும் பெருமைக்கும் உள் புகுந்து⋆
பொய்யால் ஐவர் என் மெய் குடியேறிப்⋆
    போற்றி வாழ்வதற்கஞ்சி நின்னடைந்தேன்⋆
ஐயா! நின்னடியன்றி மற்றறியேன்⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (3)

www.prapatti.com

பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன்⋆
    பார் மன்னர் மன்னர் தாம் பணிந்தேத்தும்
வரனே!⋆ மாதவனே! மதுசூதா!⋆
    மற்றோர் நல் துணை நின்னலால் இலேன் காண்⋆
நரனே! நாரணனே! திருநறையூர்
    நம்பீ!⋆ எம்பெருமான்! உம்பர் ஆளும்
அரனே⋆ ஆதிவராகம் முன் ஆனாய்!⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (4)

விண்டான் விண் புக வெஞ்சமத்தரியாய்ப்⋆
    பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து⋆
பண்டான் உய்ய ஓர் மால்வரை ஏந்தும்⋆
    பண்பாளா! பரனே! பவித்திரனே⋆
கண்டேன் நான் கலியுகத்ததன் தன்மை⋆
    கருமம் ஆவதும் என் தனக்கறிந்தேன்⋆
அண்டா! நின்னடியன்றி மற்றறியேன்⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (5)

தோயாவின் தயிர் நெய்யமுதுண்ணச்
    சொன்னார்⋆ சொல்லி நகும் பரிசே⋆ பெற்ற
தாயால் ஆப்புண்டிருந்தழுதேங்கும்
    தாடாளா!⋆ தரையோர்க்கும் விண்ணோர்க்கும்
சேயாய்⋆ கிரேத திரேத துவாபர
    கலியுகம்⋆ இவை நான்கும் முன் ஆனாய்⋆
ஆயா! நின்னடியன்றி மற்றறியேன்⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (6)

கறுத்துக் கஞ்சனை அஞ்ச முனிந்தாய்!⋆
    கார் வண்ணா! கடல் போல் ஒளி வண்ணா⋆
இறுத்திட்டான் விடையேழும் முன் வென்றாய்!⋆
    எந்தாய்! அந்தரம் ஏழு முன் ஆனாய்⋆
பொறுத்துக் கொண்டிருந்தால் பொறுக்கொணாப்⋆
    போகமே நுகர்வான் புகுந்து⋆ ஐவர்



www.prapatti.com

அறுத்துத் தின்றிட அஞ்சி நின்னடைந்தேன்⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (7)

நெடியானே! கடியார் கலி நம்பீ!⋆
    நின்னையே நினைந்திங்கிருப்பேனைக்⋆
கடியார் காளையர் ஐவர் புகுந்து⋆
    காவல் செய்த அக்காவலைப் பிழைத்து⋆
குடி போந்துன் அடிக்கீழ் வந்து புகுந்தேன்⋆
    கூறை சோறிவை தந்தெனக்கருளி⋆
அடியேனைப் பணியாண்டுகொள் எந்தாய்!⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (8)

கோவாய் ஐவர் என் மெய் குடியேறிக்⋆
    கூறை சோறிவை தாவென்று குமைத்துப்
போகார்⋆ நான் அவரைப் பொறுக்ககிலேன்
    புனிதா!⋆ புட்கொடியாய்! நெடுமாலே⋆
தீ வாய் நாகணையில் துயில்வானே!⋆
    திருமாலே! இனிச் செய்வதொன்றறியேன்⋆
ஆ! ஆ! என்றடியேற்கிறை இரங்காய்⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானே! (9)

‡அன்ன மன்னு பைம் பூம் பொழில் சூழ்ந்த⋆
    அழுந்தூர் மேல் திசை நின்ற அம்மானை⋆
கன்னி மன்னு திண்தோள் கலிகன்றி
    ஆலி நாடன்⋆ மங்கைக் குல வேந்தன்⋆
சொன்ன இன் தமிழ் நன்மணிக் கோவை⋆
    தூய மாலை இவை பத்தும் வல்லார்⋆
மன்னி மன்னவராய் உலகாண்டு⋆
    மான வெண் குடைக்கீழ் மகிழ்வாரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com